**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ம் நாள் செவ்வாய்கிழமை**

O.S. 33/2021

வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைராஜ் | தாலுக்கா | : | நாகப்பட்டினம் |
| த/பெ | : | ராமசாமி | கிராமம் | : | நாகப்பட்டினம் டவுன் |
| ஜாதி | : | | தொழில் | : | அரசு ஊழியர் (ஓய்வு) |
| சமயம் | : | | வயது | : | 76/25 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 01.08.1986 தேதிய திருவாரூர் சார்பதிவக ஆவண எண்.2262/1986-மூலம் நான் கிரயம் பெற்ற **கிரய சாசனம் - சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1** ஆகவும், கடந்த 17.07.2017 தேதிய தாவா சொத்திற்கான **சிட்டா - சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2** ஆகவும், கடந்த 14.07.1997 தேதியில் 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் திருவாரூர் சார்பதிவக ஆவண எண்.1386/1997- **சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3** ஆகவும், கடந்த 20.02.1992-ல் 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் திருவாரூர்

சார்பதிவக **ஆவண எண்.349/1992 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4** ஆகவும், கடந்த 11.09.2017 தேதியில் திருவாரூர் வட்டாட்சியரிடம் நான் நிலஅளவை மேல்முறையீடு செய்ய வேண்டி **கொடுத்த மனு நகல் (ரசீது நகலுடன்) வா.சா.ஆ.5** ஆகவும், கடந்த 05.08.2019-ல் நான் **மாவட்ட வருவாய் அலுவலருக்கு கொடுத்த மனு நகல் வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 புகைப்பட நகல் ஆவணங்களாக உள்ளதால் ஏற்புடையதல்ல என ஆட்சேபனை செய்யப்பட்டது.ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) கடந்த 24.02.2020 தேதிய தாவா சொத்திற்கான **வில்லங்க சான்று கணினி நகல் வா.சா.ஆ.7** ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.

நான் நில அளவை செய்ய வேண்டி கடந்த 14.07.2017-ல் திருவாரூர் வட்டாட்சியரிடம் விண்ணப்பம் செய்த மனு மற்றும் ரசீது, கிராம புலப்படம் நகல் ஆகியவை தாக்கல் செய்யப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

(1ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.07.21 17:31:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்